# அரசியல் விஞ்ஞானம்

## பாடத்திட்டம்

(2009 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)

## 12 ஆம் 13 ஆந் தரங்கள்

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

## 1.0 அறிமுகம்

2007 ஆம் ஆண்டின் புதிய கல்விச் சீர்த்திருத்தங்களுக்கமைவாக, கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குரிய வகையில் 12 ஆந் தரத்துக்கான புதிய பாடத்திட்டம் 2009 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தேசியக் கல்விக் கொள்கைகளுக்கமைவாக மாணவர்களின் தேர்ச்சி விருத்திக்குத் திறவு கோலாக அமையும் வண்ணம் இந்த அரசியல் விஞ்ஞான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க இப்பாடத்திட்டத்தின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையினூடாக சிறந்த அரசியல் நோக்குடன் கூடிய பிரசைகளை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் விஞ்ஞான பாடத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு இப்பாடத்திட்டத்தை பிரதானமான பதினாறு (16) தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தின் முதலாம் பாகத்தில் அரசியற் கோட்பாடுகள் மற்றும் அவற்றையடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்புகள் தொடர்பாகக் கற்றல் எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்கமைய பிரதான தேர்ச்சிகள் பத்தின் ஊடாக முதலாம் பகுதியின் பாடத்தலைப்புகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. அதற்கமைய அரசியல் விஞ்ஞானத்தின் இயல்பு, பாடப்பரப்பு, அரசின் இயல்பு, அரசாங்கத்தின் இயல்பு, அரசியல் செயன்முறை, நல்லாட்சிக்கு அடிப்படையான அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள், அரசகொள்கை உருவாக்கம் போன்ற இதுவரை காலமும் காணப்பட்ட தலைப்புகள் மென்மேலும் விருத்தி செய்யப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளன.

சமகாலத்தில் முக்கியத்துவமுடைய முரண்பாடுகள், முரண்பாட்டு மூலங்கள், முரண்பாட்டு முகாமை, முரண்பாட்டுத்தீர்வு ஆகிய புதிய தலைப்புக்களும் முதலாம் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், சர்வதேச அரசியலுடன் செயன்முறையும் இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே பல்வேறு அரசியலமைப்பு மாதிரிகள் தொடர்பாகவும் கற்கவேண்டியுள்ளது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, பெரிய பிரித்தானியா, பிரான்சு, இந்தியா, சுவிர்சர்லாந்து ஆகிய நாடுகளின் அரசியலமைப்பு மாதிரிகளைப் பயிலும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தின் இரண்டாம் பகுதியில், பிரதானமான ஆறு (06) தேர்ச்சிளினூடாக முற்று முழுதாக இலங்கையின் அரசியல் வளர்ச்சி உள்ளடக்கபட்டு இத்தலைப்புகளின் கீழ் இலங்கையில் காணப்பட்ட குடியேற்ற நாட்டாட்சியின் தன்மையை இனங்காண்பதற்கும், சுதந்திரத்தின் பின்னர் இலங்கை அரசின் தன்மையை இனங்காண்பதற்கும் வாய்ப்பேற்பட்டுள்ளது. மேலும் சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கையின் அரசியலமைப்புகளின் தன்மையையும் 1978 இன் அரசியலமைப்பின் கீழ் சனாதிபதியின் அதிகாரங்கள், பொறுப்புக்கள் மற்றும் சமூகத்தில் செயற்படும் அரசியலின் தன்மையை இனங்காண்பதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் பூகோள மற்றும் பிராந்திய சூழல் கற்கை எனும் புதியதொரு தலைப்பில் மேலும் விடயங்களைக் கற்பதும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.0 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

- ஒழுக்கம் பேணும் பொதுச் சமூக வாழ்க்கையை நடத்துவதற்காக மனிதனைப் பழக்குதல்.
- அரசு, அரசாங்கம் என்ற இரு அமைப்புக்களுடன் தொடர்புடைய நிறுவனங்களை இனங்காணும், அந்நிறுவனங்களின் செயற் பாட்டை விளங்கிக் கொள்ளலும்.
- உயர்மட்ட அரசியல் விளக்கமுடைய உயிரோட்டமான அரசியல் ஜீவிகளை உருவாக்குதல்.
- நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக அபிவிருத்திச் செயன்முறைக்கு விளைதிறனுடைய வகையில் பங்களிப்புச் செய்வதற்குத் தேவையான உளநிலையை உருவாக்குதல்.
- ஒழுக்கத்தையும் சட்டத்தையும் நியாயத்தையும் மதிக்கும் சிறந்த சிவிலியன்களாக வாழ்தல்.

# பாடத்திட்டத்தை பாடசாலை தவணைகளுக்கமைய வகுத்தக் கொள்வதற்கான திட்டம்

| தரம் | தவணை | தேர்ச்சி மட்டங்கள் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| தரம் 12 | I | 1.1, 1.2, 1.3, 1.4, 2.1, 2.2, 3.1, 3.2, 3.3, 4.1, 4.2 | 100 |
| | II | 4.3, 5.1, 5.2, 6.1, 6.2 | 100 |
| | III | 7.1, 7.2, 8.1, 8.2 | 100 |
| தரம் 13 | I | 9.1, 9.2, 10.1, 10.2, 11.1, 12.1, 12.2 | 100 |
| | II | 13.1, 13.2, 14.1 | 100 |
| | III | 15.1, 15.2, 16.1, 16.2, 16.3 | 100 |

# 3.0 பாடத்திட்டம்

## தரம் 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 1.0 அரசியல் விஞ்ஞானத்தின் இயல்பை விளங்கி அரசியல் விஞ்ஞானம் பற்றிய விழிப் புணர்வுடைய ஒருவராகச் செயற்படுவார். | 1.1 அரசியல் விஞ்ஞானத்தை ஒரு சமூக விஞ்ஞானமாக வரை விலக்கணப்படுத்துவார். | **அரசியல் விஞ்ஞானத்தை இனங்காணல்**<br>• அரசியல் விஞ்ஞானம் ஓர் சமூக விஞ்ஞானம் என்ற வகையில்,<br>  • மனிதனதும் அவனது சமூக நடத்தைகளையும் கற்றல்<br>  • மனிதன் தொடர்ந்தும் மாற்றங்களுக்குட்படும் ஒரு விலங்கு என்ற வகையில் நிலையான கருதுகோள்களின் மூலம் மனிதனை கற்க முடியாது. (அரசியல் ஓர் விஞ்ஞானமா இல்லையா என்பது தொடர்பான பிரச்சினை)<br>  • பொதுமைப்படுத்தப்பட்ட கருத்துக்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கற்கும் பாடமாக இருத்தல். | 05 |
| | 1.2 அரசியல் விஞ்ஞானத்திற்கும் ஏனைய சமூக விஞ்ஞான பாடங்களுக்குமிடையிலான தொடர்பினைப் பகுத்தாய்வார். | • அரசியல் விஞ்ஞானமும் ஏனைய சமூக விஞ்ஞான பாடங்களும்<br>  • ஏனைய சமூக விஞ்ஞான பாடங்களுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்குமிடையிலான தொடர்பை இனங்காணல்.<br>    • வரலாறு<br>    • புவியியல்<br>    • பொருளியல்<br>    • சமூகவியல்<br>    • மெய்யியல்<br>    • சட்டம் | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| | 1.3 அரசியல் விஞ்ஞானத்தின் பரிணாம வளர்ச்சி பற்றிய விளக்கத்தை தற்கால அரசியல் பின்னணியை ஆராய்வதற்காகப் பயன்படுத்துவார். | • அரசியல் விஞ்ஞானமானது ஒரு பாடமாகத் தோற்றம் பெற்ற விதமும் அதன் வளர்ச்சியும்<br>• கிரேக்க காலம்<br>• உரோம காலம்<br>• மத்திய காலம்<br>• நவீன காலம்<br>(அவ்வக்காலப் பகுதிகளில் கவனஞ் செலுத்தப்பட்ட பிரதான அரசியல் கருத்துக்களை இனங்காணல்) | 05 |
| | 1.4 பாடத்துக்குரிய தனிச்சிறப்பான பல்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி அரசியல் விஞ்ஞானத்தைப் பயில்வார். | • அரசியல் விஞ்ஞானம் கற்பதற்குரிய அணுகு முறைகள்<br>• மெய்யியல் அணுகுமுறை<br>• ஒப்பீட்டு அணுகுமுறை<br>• வரலாற்று அணுகுமுறை<br>• சமூகவியல் அணுகுமுறை<br>• நடத்தைவாத அணுகுமுறை<br>• முறைமைப்பகுப்பாய்வு முறை<br>• புள்ளிவிபரவியல் முறை<br>• அரசியல் விஞ்ஞானத்தைக் கற்பதன் முக்கியத்துவம்<br>• அரசியல் கோட்பாடுகள் மற்றும் தத்துவம் தொடர்பாக புத்தறிவைத் தேடிச் செல்லும் ஆர்வத்தை விருத்தி செய்தல்<br>• நற்பிரசையாவதற்கான பயிற்சியை வழங்குதல்<br>• நல்ல இராசதந்திரியாதல்<br>• தேசிய, சர்வதேச அரசியல் தொடர்பாக ஒப்பீட்டு ரீதியில் விளங்கிக் கொள்ளுதல்<br>• அரசியல் சமூகமொன்றில், செயற்பாட்டு ரீதியான அரசியல் வாழ்க்கையை நடத்துவதற்குச் சந்தர்ப்பம் பெறுதல் | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 2.0 அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பு தொடர்பான விடயங்களை விரிவாக ஆராய்வார். | 2.1 அரசியல் விஞ்ஞானப் பாடப் பரப்பில் அடங்கும் பாடவிடயங் களைப் பயில்வார். | **அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பு**<br>• அரசியல் தத்துவம், அரசியல் சிந்தனை, அரசியல் கோட்பாடுகள், அரசியல் கருத்துக்கள்<br>• அரசும் அரசாங்கமும்<br>• அரசியல் அதிகாரம்<br>• அரசியல் செயன்முறை<br>• சட்டமும் நீதியும்<br>• ஒப்பீட்டு அரசாங்கமுறை<br>• பொது நிர்வாகம், அரச கொள்கை உருவாக்கமும் முகாமைத்துவமும்<br>• முரண்பாட்டு மூலம், முரண்பாட்டு முகாமைத் துவமும் முரண்பாடு தீர்த்தலும் | 05 |
| | 2.2 பொது மக்களின் வாழ்க்கையை சிறந்ததாக்குவதற்காக அரசி யல் விஞ்ஞான பாடப்பரப்பைச் சேர்ந்த விடயங்கள் செல்வாக் குச் செலுத்தும் விதம்பற்றிய அறிவூட்டம் பெற்ற ஒரு தனியா ளராவார். | • சர்வதேச அரசியல்<br>• பிராந்திய ஆட்சி<br>(மேற்படி தலைப்பு தொடர்பில் அடிப்படை அறிவை ஆரம்பத்தில் வழங்கி அந்தந்தத் தலைப்பு சார்ந்த நூல்களை வாசிப்பதற்கும் தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற் கும் குறிப்பிட்ட செயற்றிட்டங்களில் ஈடுபடு வதற்கும் மாணவரை வழிப்படுத்துதல் வேண்டும்.) | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 3.0 அரசின் இயல்பு தொடர்பில் விளங்கிக் கொள்வதற்காக நுணுகியாய்ந்து செயற்படு வார். | 3.1 'அரசு' எனும் எண்ணக்கரு வைப் பகுத்தாய்வார். | **அரசு பற்றிய கற்கை**<br>• அரசை இனங்காணல்<br>• அடிப்படைகள்<br>நிலம், மக்கள் தொகை, அரசாங்கம், இறைமையதிகாரம் | 05 |
| | 3.2 அரசின் தோற்றம், வளர்ச்சி பற்றிய அனுபவங்களுடன் நவீன அரச எண்ணக்கருக் களை நுணுகியாய்வார். | • அரசு: தோற்றமும் வளர்ச்சியும்<br>• கிரேக்க நகர அரசு முறை<br>• மானிய முறை அரசு<br>• தேசிய அரசு முறை (பொலிஸ், பொது நலன் மற்றும் குறைந்த பட்ச அரசு மாதிரிகள்)<br>• நவீன அரசுகள் - முதலாம், இரண்டாம், மூன்றாம் உலக அரசுகளின் சிறப்பியல்புகள் | 05 |
| | 3.3 அரசின் தோற்றம் பற்றிய பல்வேறு கோட்பாடுகளையும் பல்வேறு அரச மாதிரிகளையும் ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாய்வார். | • அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகள்<br>• தெய்வீக வழியுரிமைக் கோட்பாடு<br>• சமூக ஒப்பந்தக் கோட்பாடு<br>• லிபறல் கோட்பாடு<br>• பாசிசக்கோட்பாடு<br>• மாக்சியக் கோட்பாடு<br>• தாய்வழி, தந்தை வழிக்கோட்பாடு | 15 |
| | | • அரசு தொடர்பான அரசியல் எண்ணக்கருக்கள்<br>• அரசு, தேசம், இனத்துவம், தேசியம்<br>• அரசும் சமூகமும்<br>• அரசும் அரசாங்கமும்<br>• அரசும் ஏனைய சமூக அமைப்புக்களும் | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 4.0 அரசின் இயல்பு, அரசியலமைப்பு மாதிரிகள், பொறுப்புக்கள் தொடர்பாகப் பெற்றுள்ள விரிவான விளக்கத்தை வெளிக்காட்டுவார். | 4.1 அரசாங்கம் பற்றிய எண்ணக்கருவை வரைவிலக்கணஞ் செய்வார். | **அரசாங்கம்**<br>• அரசாங்கத்தை இனங்காணல்<br>• அரசாங்கம் - ஒரு சமூக ஒழுங்கமைப்பு என்ற வகையில் ஏனைய சமூக ஒழுங்கமைப்புகளில் இருந்து வேறுபடும் விதம்<br>• அரசாங்க அதிகாரம் - இறைமையதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் முகவர் என்ற வகையில்<br>• அரசின் அதிகாரம் பிரயோகிக்கப்படும் முறைகள்<br>  • பலப்பிரயோகம்<br>  • ஒப்பந்தம்<br>  • தணடனை வழஙகல் | 15 |
| | 4.2 அரசின் அதிகாரத்தையும் அவ்வதிகாரம் பிரயோகிக்கப்படும் விதத்தையும் பகுப்பாய்வு ரீதியில் அவதானிப்பார். | • அதிகாரப் பிரயோகக் கருவிகள்<br>  • பொலிஸ்<br>  • பொதுச்சேவை (சிவில் சேவை)<br>• அரசாங்கம் - அமைப்புக்களும் பணிகளும்<br>  • நிறைவேற்றதிகாரம்<br>  • சட்டவாக்கம்<br>  • நீதித்துறை | 10 |
| | 4.3 அரசியலமைப்பு வகைப்பாட்டை விளங்கிக் கொண்டு அவற்றின் கட்டமைப்பு பணிகள் தொடர்பான முனைப்பான கண்ணோட்டத்தை வெளிப்படுத்துவார். | • அரசாங்க அதிகாரத்தை சமப்படுத்தும் வழிமுறைகள்<br>  • அதிகாரப் பகிர்வு<br>  • அரசியலமைப்பும் அரசியலமைப்பு வாதமும்<br>• அரசியலமைப்பு மாதிரிகள் (அரசியல் கோட்பாடுகளுக்கேற்ப)<br>  • லிபறல் ஜனநாயகம்<br>  • பாசிசம்<br>  • சமவுடமை<br>  • சமூக ஜனநாயகம் | 50 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| | | • அரசியலமைப்பு மாதிரிகள் (அதிகாரப்பகிர்வின் அடிப்படையில்)<br>• ஒற்றையாட்சி<br>• சமஷ்டியாட்சி<br>• கூட்டுச் சமஷ்டி<br><br>• அரசியலமைப்பு மாதிரிகள் (நிறைவேற்று அதிகாரம் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு)<br>• கபினட் (அமைச்சரவை) அரசியலமைப்பு<br>• ஜனாதிபதி அரசியலமைப்பு<br>• கலப்பு அரசியலமைப்பு<br>• அனைத்தாண்மை/ எதேச்சாதிகாரம்<br><br>• அரசாங்கத்தின் பணிகள்<br>• சட்டத்தையும் ஒழுங்கையும் பேணல்<br>• தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்<br>• தேசிய பொருளாதாரத்தையும் தேசிய நலனையும் மேம்படுத்தல்<br>• பிற வெளிநாட்டுத் தொடர்புறவுகளைப் பேணல்<br><br>மேற்படி பணிகளுக்காக அரச கொள்கை உருவாக்கமும், முகாமைத்துவம் செய்தலும் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 5.0 அரசியல் முதிர்ச்சியுடைய ஒருவராக அரசியல் செயன் முறையில் பங்களிப்புச் செய்வார். | 5.1 அரசாங்கவாக்கத்துடன் மக்கள் தொடர்புபடும் முறைகளைத் தேடியாய்ந்து இனங்காண்பார். | **அரசியல் செயன்முறை: அரசாங்கமும் மக்களும்**<br>• அரசாங்க ஆக்கத்தில் மக்கள் பங்கு பெறும் முறைகள்<br>  • பிரதிநிதித்துவ முறையும் தேர்தல் முறையும்<br>  • நேரடி ஜனநாயக முறை ஏற்பாடுகள்<br>  • அரசியல் கட்சிகள்<br>  • பொதுமக்கள் கருத்து<br>  • அமுக்கக் குழுக்கள்<br>  • சிவில் சமூகம் | 20 |
| | 5.2 அரசியல் செயற்பாடுகளின் போது மக்கள் அரசியலைக் கற்கும் விதம், நடந்து கொள்ளும் விதம் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்ளும் விதம் ஆகியவற்றை விளக்குவார். | • மக்கள் அரசியல் உயிரிகள் என்ற வகையில்<br>  • அரசியல் சமூகமயமாக்கம்<br>  • அரசியல் நடத்தை<br>  • அரசியல் கலாசாரம்<br>  • அரசியல் வன்முறை<br>  • அரசியல் உயர்குழாம் | 10 |
| 6.0 சனநாயகம், நல்லாட்சிக்காக அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படை எண்ணக்கருக் களைப் பயன்படுத்துவார். | 6.1 சனநாயக ஆட்சியின் அடிப் படைக் கோட்பாடுகளைப் பகுப்பாய்வு செய்வார். | • ஜனநாயகம் பற்றிய தெரிவு செய்யப்பட்ட எண்ணக்கருக்கள்<br>  • சனநாயகம்<br>  • உரிமைகளும் கடமைகளும்<br>  • சுதந்திரமும் சமத்துவமும்<br>  • சட்டமும் சட்டத்தின் ஆட்சியும் | 10 |
| | 6.2 சனநாயகத்துக்கும் நல்லாட்சிக் கும் இடையிலான தொடர்பு களைப் பகுத்தாய்வார். | • நல்லாட்சி | 10 |

## அரசறிவியல் மூலதத்துவங்கள் - II தரம் 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 7.0 இலங்கையில் காணப்பட்ட காலனித்துவ ஆட்சியின் தன்மையை இனங்காண்பார். | 7.1 பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்துள் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தியை இனங்காண்பார். | **காலனித்துவ ஆட்சி:**<br>• பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கால அரசின் அடிப்படைப் பண்புகளும் அரசியல் அபிவிருத்தியும்<br>• தலையிடாத காலனித்துவ அரசைத் தாபிப்பதில் செல்வாக்குச் செலுத்திய அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள்<br>• சட்டவாக்கம், நிறைவேற்றதிகாரம், நீதித்துறை (அதிகாரப்பகிர்வு) ஆகிய நிறுவனங்கள், பிரதிநிதித்துவ முறை, தேர்தல் முறை, வாக்குரிமை ஆகியன தொடர்பாகக் கவனஞ் செலுத்தி கி.பி. 1832 தொடக்கம் 1931 வரை அரசியலமைப்பு வளர்ச்சி<br>• பொது நிர்வாகம், நீதி, உள்ளூராட்சித் துறைகளிலேற்பட்ட மாற்றங்கள் 1833-1948 வரை | 25 |
| | 7.2 காலனித்துவ ஆட்சிக்காலத்தில் செயற்பட்ட சமூக இயக்கங்களை இனங்கண்டு அவை செயற்பட்டுள்ள விதத்தை ஊடுருவி நோக்குவார். | • காலனித்துவ ஆட்சிக்காலத்தில் செயற்பட்ட சமூக இயக்கங்கள்<br>• சமய மறுமலர்ச்சி இயக்கம்<br>• தேசிய இயக்கம்<br>• தொழிலாளர் இயக்கம்<br>• இடதுசாரி இயக்கம் | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 8.0 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியலமைப்பு தயாரித்தலின் பின்னணிக் காரணிகளை இனங்காண்பார். | 8.1 சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் அரசியலமைப்புக்கள் தயாரிப்புக்கு பின்னணியாக அமைந்த காரணிகளைப் பகுத்தாய்வார். | **சுதந்தநிரத்தின் பின்னரான அரசு**<br>• சோல்பரி, 1972, 1978 அரசியலமைப்புக்களைத் தயாரித்தலில் செல்வாக்குச் செலுத்திய அரசியல், பொருளாதார, சமூக காரணிகளை ஆராய்தல்.<br>  • சோல்பரி அரசியலமைப்பு தயாரித்தலுக்குப் பின்னணியாக அமைந்த காரணிகள்<br>  • 1972 அரசியலமைப்பு தயாரித்தலுக்குப் பின்னணியாக அமைந்த காரணிகள்<br>  • 1978 அரசியலமைப்பு தயாரித்தலுக்குப் பின்னணியாக அமைந்த காரணிகள் | 25 |
| | 8.2 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியலமைப்பு நிறுவனங்களை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்வார். | • சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியலமைப்பு<br>  • சட்டத்துறை<br>  • நிறைவேற்றுத்துறை<br>  • நீதித்துறை<br>  • பொது நிருவாக முறைமை | 25 |

## 3.2 - தரம் 13 அரசியல் விஞ்ஞான மூலதத்துவங்கள் - I

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 9.0 அரச கொள்கை வகுத்தல் மற்றும் முகாமைத்துவம் பற்றிப் பகுத்தாய்வார். | 9.1 அரச கொள்கை வகுத்தல் மற்றும் முகாமைத்துவம் பற்றிய விடயங்களைப் பகுத் தாய்வார். | • பொது நிர்வாகத்தினை இனங்காணல்<br>  • பொதுநிருவாகத்தின் அடிப்படை அம்சங்கள்<br>  • பொதுநிருவாகத்தின் முக்கியத்தவம்<br>• அரச கொள்கை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்<br>  • அரச கொள்கைகளுக்கும் நிருவாகத்துக்கும் இடையிலான தொடர்பு<br>  • அரச கொள்கை வகுத்தலின் அடிப்படையான இயல்புகளை இனங்காணல்.<br>  • அரச கொள்கை வகுத்தலில் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள் | 10 |
| | 9.2 பொது மக்களின் நன்மைக்காக அரச கொள்கை வகுத்தல் மற்றும் பொது நிருவாகம், நிருவாகத்தை முகாமைத்தும் செய்யும் கோட்பாடுகளைப் பகுத்தாய்வார். | • அரச கொள்கை முகாமை<br>  • கொள்கை உருவாக்குவோரை இனங்காணல்<br>  • கொள்கைகளை முகாமை செய்யும் விதத்தை இனங்காணல்<br>  • முகாமைத்துவத்திற்கும் பொதுநிருவாகத்திற்குமிடையிலான தொடர்புகள் | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 10.0 முரண்பாடு தீர்ப்பதற்காக பொருத்தமான வகையில் தலையிட்டுச் செயற்படுவார். | 10.1 'முரண்பாடு' என்பதை வரைவிலக்கணப்படுத்துவார். | • முரண்பாடும் முரண்பாடு தீர்த்தலும்<br>• முரண்பாடுகள்<br>• அடிப்படையான வரைவிலக்கணங்கள்<br>• முரண்பாட்டின் மூலம்<br>• முரண்பாடுகளும் அவற்றின் தொழில்களும்<br>• முரண்பாட்டுச் செயன்முறை<br>• முரண்பாடும் அகிம்சையும் | 10 |
| | 10.2 முரண்பாட்டைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் நுட்பமுறைகள் தொடர்பான அறிவூட்டத்தை வெளிப்படுத்துவார். | • முரண்பாடு தீர்த்தல் தொடர்பான எண்ணக் கருக்கள்<br>• முரண்பாடு தீர்த்தல்<br>• முரண்பாட்டு முகாமை<br>• முரண்பாடு நிலைமாற்றல்<br>• முரண்பாடு இணக்கப்படுத்தல்<br>• சமாதானக் கல்வி | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 11.0 சர்வதேச அரசியல் தொடர்பான விளக்கத்தை வெளிக்காட்டுவார். | 11.1 சர்வதேச அரசியல் செயன்முறை பற்றி விமர்சன ரீதியில் ஆராய்வார். | • சர்வதேச அரசியல்<br>• சர்வதேச அரசியலை இனங்காணல்<br>• பாத்திரங்களும் வகிபாகங்களும்<br>• நாடுகளுக்கிடையே தொடர்புகளைப் பேணும் முறைகள் - வெளிநாட்டுக்கொள்கைகள், தூதுவர் சேவை, பொருளாதார அதிகாரம், போர்<br>• நாடுகளுக்கிடையிலான தொடர்புகளைக் கட்டுப்படுத்தும் உத்திகள் - கூட்டான பாதுகாப்பு, அதிகாரச் சமப்பாடு, சர்வதேச சட்டம், ஆயுதக்களைவு, உலக அரசாங்கம் | 20 |
| 12.0 பொருத்தமான ஆட்சி முறையொன்றினை ஏற்படுத்துவதற்காக அரசியலமைப்புமுறை மாதிரிகளை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்வார். | 12.1 தெரிவு செய்துகொண்ட அரசியலமைப்பு முறை மாதிரிகளின் அடிப்படையான இயல்புகளை ஆராய்வார். | • தெரிவு செய்துகொண்ட அரசியலமைப்பு முறைகள் தொடர்பான கற்கை<br>• அமெரிக்க ஐக்கியக் குடியரசு<br>• பெரிய பிரித்தானியா<br>• பிரான்சு<br>• இந்தியா<br>• சுவிட்சர்லாந்து | 20 |
| | 12.2 மேற்படி தெரிவு செய்துகொண்ட அரசியலமைப்பு முறை மாதிரிகள் தொடர்பாக ஒப்பீட்டு ரீதியில் நுணுகியாய்வார். | • தெரிவு செய்துகொண்ட அரசியலமைப்பு முறைகள் அரசியல் நிறுவனங்களை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்தல்<br>• சட்டத்துறை<br>• நிறைவேற்றுத்துறை<br>• நீதித்துறை<br>• கட்சிமுறை | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 13.0 சுதந்திர இலங்கையின் அரசியலமைப்புகளதும் சிறப்பான அரசியல் அமைப்பு நிறுவனங்களினதும் விதிமுறைகளினதும் தன்மையை இனங்காண்பார். | 13.1 சுதந்திரத்தின் பின்னர், இலங்கையின் அரசியலமைப்புகளின் சிறப்பான அரசியலமைப்பு விதிமுறைகளை ஒப்பீட்டு ரீதியில் வகுத்து நோக்குவார். | • சுதந்திரத்தின் பின் இலங்கையின் அரசியலமைப்புகளில் சிறப்பான அரசியலமைப்பு விதிமுறைகள்<br>• அடிப்படை உரிமைகள்/ மொழி உரிமைகள்/ சிறுபான்மையினரின் உரிமைகள்<br>• தேர்தல் முறையும் பிரதிநிதித்துவ முறையும்<br>• நிதிக் கட்டுப்பாடு | 30 |
| | 13.2 சுதந்திரத்தின் பின்னர், இலங்கையின் அரசியலமைப்புகளின் சிறப்பான அரசியலமைப்பு நிறுவனங்களை ஒப்பீட்டு ரீதியில் பகுத் தாய்வார். | • 1972, 1978 அரசியலமைப்பின் யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட விசேட அரசியலமைப்பு நிறுவனங்கள்.<br>• அரசியலமைப்பு நீதிமன்றம் - 1972<br>• ஓம்புட்ஸ்மன் - 1978<br>• அரசியலமைப்புச்சபை - 1978<br>• தேர்தல் ஆணைக்குழு - 1978<br>• பிரதேச ஆட்சி - 1948 தொடக்கம் இன்று வரை<br>• உள்ளூராட்சி முறை<br>• மாகாண சபைகள் முறை | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 14.0 1978 இன் அரசியலமைப்பில் சனாதிபதியின் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் இனங்காண்பார். | 14.1 1978 இன் அரசியலமைப்பு முறையில் ஏனைய நிறுவனங்கள் தொடர்பாக சனாதிபதியின் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் இனங்காண்பார்.<br><br>14.2 | • 1978 இன் அரசியலமைப்பின் செயற்பாடு:<br>• சனாதிபதியும் அமைச்சரவையும்<br>• சனாதிபதியும் சட்டவாக்கத்துறையும்<br>• சனாதிபதியும் நீதித்துறையும்<br>• சனாதிபதியும் அரச சேவையும் | 40 |
| 15.0 சமூகத்தில் செயற்படும் அரசியலின் தன்மையை இனங்கண்பார். | 15.1 அரசியல் முறையில், அரசியல் கட்சிகளின் பொறுப்புக்களை நுணுகியாய்வார். | • இலங்கையின் தற்போதைய அரசியல் செயன்முறையில் செயற்படும் சக்திகள்:<br>• இலங்கையின் அரசியல் கட்சிகளும் கட்சி முறையும் | 15 |
| | 15.2 அமுக்கக் குழுக்கள் பொதுமக்களின் கருத்துக்கள், பொதுசனத் தொடர்பூடகங்கள் ஆகியன அரசியல் செயன்முறையில் செயற்படும் விதத்தை நுணுகியாய்வார். | • அமுக்கக் குழுக்கள்<br>• பொதுமக்களின் கருத்து<br>• ஊடகங்களும் அரசியலும் | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 16.0 இலங்கையின் பூகோள மற்றும் பிராந்திய சூழலை இனங்காண்பார். | 16.1 தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமையம், ஆசியான் ஐரோப்பிய ஒன்றியம் பொதுநலவாயம், ஐக்கிய நாடுகள் தாபனம் மற்றும் பிரதான இணை அமைப்புக்கள், பிரதான அரசு சாரா அமைப்புக்கள் ஆகியவற்றின் செயற்பாட்டை நுணுகியாய்வார். | • பூகோள மற்றும் பிராந்திய அரசியலில் இலங்கை:<br>• தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமையம் (SAARC)<br>• ஆசியான் (ASIAN)<br>• ஐரோப்பிய ஒன்றியம் (Europian Union)<br>• பிரித்தானிய பொதுநலவாய அமைப்பு<br>• இலங்கையும் ஐக்கிய நாடுகள் தாபனமும்<br>• தெரிவு செய்யப்பட்ட சில பல் தரப்பு பூகோள அமைப்புக்களும் இலங்கையும்<br>• உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், பிரதானமான மனித உரிமைகள் நிறுவனங்களான சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் ஆய்வு அமையம் (Human Rights watch) | 30 |
| | 16.2 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை நுணுகியாய்வார். | • சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை<br>• வெளியுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்<br>• உண்ணாட்டு அரசியல் காரணிகள்<br>• சமயக் காரணிகள்<br>• பொருளாதாரக் காரணிகள்<br>• கருத்தியல் காரணிகள்<br>• வெளிநாட்டு அரசியல் காரணிகள் | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| | 16.3 வெளியுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைப் பகுப் பாய்வு செய்து சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் போக்குகளை ஆராய்வார். | • சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வெளியுறவுக் கொள்கையின் போக்குகள் | 15 |

# 4.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டங்களும்

பாடத்திட்டத்தில் அடங்கியுள்ள பாட விடயங்களை வெற்றிகரமான கற்றல் அனுபவங்களாக்குவதற்காக மாணவர்கள் அனைவரும் பங்கு கொள்ளத்தக்க வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு உருவாக்குதல் பாடசாலை நிருவாகத்தினரின் பொறுப்பாகும். அவ்வாறான வேலைத்திட்டங்களில் உள்ளடங்கத்தக்க சில இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் இங்கு தரப்பட்டுள்ளன.

- அரசியல் விஞ்ஞான சங்கமொன்றை நிறுவுதல், அச்சங்கத்தின் ஊடாக வினா விடைப் போட்டிகள், விவாத அரங்கு, கண்காட்சிகள், சுவர்ப்பத்திரிகை, பருவ வெளியீடுகள் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துதல்.
- கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல்.
- தனியாட்கள், நூல்களை மூலாதாரமாகக் கொண்டு சிறியளவிலான ஆய்வுச் செயற்றிட்டங்களைத் தொடங்குதலும் அவற்றின் ஊடாக பல்வேறு அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை முன்வைக்கத் தூண்டுதலும்
- அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஆட்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து அறிக்கை தயாரிக்கும் பொருட்டு செயற்றிட்டமொன்றை மேற்கொள்ளல்.
- பிரதேசத்திலுள்ள பல்கலைக்கழகங்கள், உயர்க்கல்வி நிறுவனங்கள், ஏனைய நிறுவனங்களுடன் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ள வழிப்படுத்தல்.
- சர்வதேச சஞ்சிகைககள், மற்றும் இணைத்தளப் பயன்பாட்டினூடாக அறிவை வளர்த்துக் கொள்ள வழிப்படுத்தல்.

# 5.0 கற்றல் - கற்பித்தல் முறை

அரசியல் விஞ்ஞான பாடம் தொடர்பாக வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக பின்வரும் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தலாம்.

- சிந்தனைக்கிளர்வு கலந்துரையாடல்கள் நடத்துதல்
- சஞ்சிகையாக்கம்
- வினா - விடைக் கோவை தயாரித்தல்
- விவாதங்கள் நடத்துதல்
- கையேடுகள் தயாரித்தல்

# 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலை மட்ட மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின்கீழ், அந்ததந்தத் தவணைக்குரிய தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை உள்ளடக்கும் வகையில் கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகள் ஆக்கபூர்வமான வகையில் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

13 ஆந் தரத்தின் இறுதியில் இடம்பெறும், தேசிய மட்டத்திலான மதிப்பீடாகிய க.பொ.த. உயர்தர பரீட்சைக்காக இப்பாடத்திட்டம் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தினால் நடத்தப்படும் தேசிய மட்டப் பரீட்சை முதல் தடவையாக 2011 ஆம் ஆண்டில் நடத்தப்படும்.

இப்பரீட்சைக்குரிய வினாத்தாளின் மாதிரியுரு மற்றும் தன்மை பற்றிய தேவையான விவரங்கள் இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தினால் வழங்கப்படும்.